இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -07

# நேர்மை நெறி

ஜுலை 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது

## (NERMAI NERI)

Rs.10

## நீதி மன்றங்கள் அறம் காக்கவே: செல்வந்தர்களைக் காக்க அல்ல.




## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com
website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

வணக்கம்!. மீண்டும் இம்மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். . கொரோனா என்ற கொடிய வைரசின் கோரப்பிடியிலிருந்து தப்பித்து மெல்ல மீண்டு வந்து நீண்ட இடைவெளிக்குப்பின் இயக்கப் பொதுக்குழுக் கூட்டம் **10.07.2022 அன்று, சென்னை எக்மோர் பாண்டியன் ஓட்டலில்** நடைபெற உள்ளது. அப்பொதுக்குழுவில் அனைத்து உறுப்பினர்களும் பெருந்திரளாக வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஊழலும் இரு கழகங்களும்**:

சில தினங்களுக்கு முன் “கொள்ளையனே வெளியேறு” என்ற போராட்டம் “அறப்போர் இயக்கம்” என்ற நம்மை போன்ற ஒரு ஊழல் எதிர்ப்பு இயக்கத்தால நடத்தப்பட்டது. போராட்டத்தின் கோரிக்கை என்ன வென்றால், **ஊழல் செய்ததற்காக முன்னாள் அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி மீது ஊரக வளர்ச்சி துறையில் டெண்டர் விட்டதில் ஊழல் என்று நீதிமன்றமே முகாந்திரம் இருக்கிறது என்று அறிவித்து குற்ற வழக்கு பதியப்பட்டுள்ள போதும், ஊழலை ஒழிப்பேன் என்று ஆட்சிக்கு வந்த திரு.ஸ்டாலின் அவர்கள் உண்மையில் நேரடியாக ஊழல் செய்த IAS அதிகாரிகளை விட்டுவிட்டதை எதிர்த்தே**” இந்த கோஷம். IAS அதிகாரிகள வழக்கில் சேர்க்காததற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்றாக யாம் கருதுவது, வழக்கம் போல், IAS அதிகாரிகள் முதல்வரிடம் சென்று “சென்ற அதிமுக ஆட்சியில் அவர்கள் சொன்னபடியெல்லாம் வளைந்து கொடுத்து ஊழலுக்கு ஒத்துழைத்தோம். தற்போது தங்கள் திமுக ஆட்சியில் அதைவிட அதிகமாக ஊழலுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறோம். அதனால். எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது. அவ்வாறு நடடிக்கை எடுத்தால் ஒருவர் கூட தங்கள் ஊழலுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள்” என்று கூறியிருப்பர். எனவே வழக்கம் போல், ஊழல் செய்த IAS . அதிகாரிகளை விட்டு விட்டு முன்னாள் அமைச்சர் மீது மட்டும் வழக்கு பதியப்பட்டிருக்கலாம். அல்லது, எஸ்.பி.வேலுமணியிடமே பேரம் பேசி, மக்களை ஏமாற்ற வழக்கு பதிவது போல் பாசாங்கு செய்து , சட்டத்தின் முன் நிற்காதவகையில் ஒரு வழக்கைப் பதிவு செய்துவிட்டு, அவரிடம் பேரம் பேசி ஒரு பெருந்தொகை, அதாவது 1000 கோடி ரூபாய் அளவுக்கு பெற்றுவிட்டு [நமது மனக் கணக்கு], “நாங்கள், சட்டத்தின் முன் நிற்காத வகையில் வழக்கு பதிவு செய்கிறோம், நீங்கள், வழக்கம் போல் நீதிமன்றம் சென்று டெண்டர் கோப்புகளில் கையொப்பமிட்ட IAS மற்றும் பிற அதிகாரிகளை வழக்கில் சேர்க்காமல் என் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக வழக்கு போடப்பட்டுள்ளது என்று கூறி தப்பித்துக்கொள்ளுங்கள், ஏனெனில் நீதிமன்றம் தமக்கு இருக்கும் பணிச்சுமையில், தாமாகவே முழுவதும் ஆராய்ந்து அதிகாரிகளையும் வழக்கில் சேர்த்து வழக்கை நடத்துங்கள் என்று உத்திரவு விடப்போவதில்லை” என்று தெரிவிப்பது.

இதை ஏன் யாம் இவ்வாறு கூறுகிறோம் என்றால், இதுபோலவே, 2001ல் அதிமுக ஆட்சிக்கு வந்தபின் இன்றைய முதல்வர் திரு.ஸ்டாலின் அவர்கள் மீது சென்னையில் கட்டப்பட்ட 9 மேம்பாலங்கள் கட்டப்பட்டதில் செய்யப்பட்ட ஊழலுக்காக குற்ற வழக்கு பதியப்பட்டது. இது குறித்து நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பொறியாளர்கள் குழு அளித்த அறிக்கையில் ஊழல் நடந்திருப்பதும் திரு.ஸ்டாலின் மற்றும் பல IAS அதிகாரிகள் ஊழலில் சம்பந்தப்படிருப்பதும் தெரியவந்தது. உடனே, IAS அதிகாரிகள் அப்போதைய முதல்வர் செல்வி. ஜெயலலிதாவிடம், “சென்ற திமுக ஆட்சியில் அவர்கள் சொன்னபடியெல்லாம் வளைந்து கொடுத்து ஊழலுக்கு ஒத்துழைத்தோம். தற்போது தங்கள் அதிமுக ஆட்சியில் அதைவிட அதிகமாக ஊழலுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறோம். அதனால். எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது. அவாறு நடவடிக்கை எடுத்தால் ஒருவர் கூட தங்கள்

ஊழலுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள்" என்று கூறியதன் விளைவாகவே ஊழல் வழக்கு விலக்கிக்கொள்ளப்பட்டதாக தெரிகிறது. ஆக, மாறி மாறி ஊழல் செய்வதும், ஆட்சி மாறியதும், நடவடிக்கை எடுப்பதாக பலகோடி ரூபாய் செலவழித்து வழக்குப்போட்டு வழக்கை வருடக்கனக்கில் நடத்திவிட்டு பின்னர் அதை நீர்த்து போகச் செய்வதும்/வாபஸ் வாங்குவதும் தொடர்கதைதான். இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு.

**இதில் BJP கட்சியின் பங்கு**:-

இது போன்ற ஊழல்களில் அதிகாரிகளின் ஒத்துழைப்பை உறுதி செய்யும் வகையில் ஊழல் எதிர்ப்பு சட்டத்தையே திருத்தி விட்டது. திரு. மோடி அவர்களின் அரசு. திருத்திய சட்டத்தின்படி, ஒரு அதிகாரியின் மீதி ஊழல் வழக்கில் எந்த வித புலன் விசாரனை மேற்கொளவதாக இருந்தாலும் அரசின் முன்அனுமதி பெற்றுத்தான் ஆரம்பிக்க வேண்டும். ஆக, ஆட்சியாளர் நினைத்தால் மட்டுமே ஒரு அதிகாரிக்கு எதிராக புலன் விசாரணை செய்யப்படும். ஆக ஊழல் செய்ய உத்திரவு இடும் அமைச்சர் நினைத்தால் மட்டுமே ஊழல் அதிகாரி மீது வழக்கு பாயும். இந்த சட்டத்திருத்தம், ஊழலுக்கு ஒத்துழைக்க மறுக்கும் அதிகாரிகள் மீது பொய் புகார் கொடுக்க வைத்து, அதற்கு அமைச்சர் இசைவு கொடுத்து, அவரை வழக்கில் இழுத்தடிப்பர். அவரும், அமைச்சரிடம் சரண் அடைந்து, இனி அனைவரையும் விட அதிகமாக ஒத்துழைக்கிறேன் என்று ஒத்துழைப்புக்கொடுத்து வழக்கில் இருந்து வெளிவந்து மிகவும் திறமையாக ஊழலுக்கு ஒத்துழைத்து பயனும் பெறுவார். நேர்மையாக இருந்து பல ஆண்டுகள் வீணாகி விட்டதே என்று அதை ஈடு செய்ய ஓடோடி ஊழல் செய்வார். ஆக, திரு. மோடி அவர்களின் ஆட்சி ஊழலை ஆலமரமாக நிலைத்து நிற்கச் செய்துவிட்டது. இந்தக் கொடும்பாவச் செயலை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு பல ஆண்டுகளாக உச்ச நீதி மன்ரத்தில் நிலுவையில் உள்ளது. இதுதான், நமது பாரத தேசம்!. இதுதான் நம் மக்களாட்சி!!. நாமும் இந்த சட்டதிருத்தத்தை எதிர்த்து வழக்க தொடுக்கவுள்ளோம்.

இதைக் கண்டு நாம் துவண்டு விடக்கூடாது. நாம் நம் மூச்சு இருக்கும் வரை, இந்த அதர்மத்தை எதிர்த்து போராடுவோம். நமது முயற்சி பலனளிக்கும். மேலும், இந்த தர்மயுத்தம் மனித இனம் இருக்கும் வரை நடந்து கொண்டு தான் இருக்கும். நாம் எந்த பக்கம் இருக்கிறோம் என்பதே நாம் வேண்டியது. தர்மம் வெல்லும் என்று நம்பித்தான் ஆக வேண்டும். நாமும் நம்புவோம்.!

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!.**

நன்றி! வணக்கம்!!.

அன்புடன்,
(ந.சுப்ரமனியன்

---

## இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:

திரு **N** சுப்ரமணியன், தலைவர் **: 9444274352**
திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

# ஏமாற்றி பிழைக்கும் மருத்துவ உலகம்!

வே.கார்த்திகை ராஜன்
பொதுச்செயலாளர்

***........மாரடைப்பு ஏற்பட்டுள்ளது!*"**

மருத்துவர் கூறுகிறார்- Streptokinase ஊசி போடுங்கள்... 9,000/ ரூபாய்... *ஊசியின் உண்மையான விலை ரூ.700/= *ஆனால் MRP ரூ. 9,000/=!* நீங்கள் என்ன செய்வது ?

***.........டைபாய்டு வந்தது...***

மருத்துவர் எழுதினார் - *மொத்தம் 14 மோனோசெஃப் எடுக்கப்படும்! மொத்த விற்பனை விலை ரூ.25/=...மருத்துவமனையின் வேதியியலாளர் ரூ.53/=க்கு பில் தருகிறார்...* என்ன செய்வீர்கள்??

***.........சிறுநீரகம் செயலிழந்துவிட்டது..***

*...........மூன்று நாளுக்கு ஒருமுறை டயாலிசிஸ் செய்யப்படுகிறது.., டயாலிசிஸ் முடிந்து ஒரு ஊசி போடப்படுகிறது - MRP அனேகமாக ரூ.1800!* *நான் அதை மொத்த சந்தையில் இருந்து எடுக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்! இந்தியா முழுவதும் தேடினாலும் எங்கும் கிடைக்கவில்லை... ஏன்?* *நிறுவனம் மருத்துவருக்கு மட்டுமே சப்ளை செய்கிறது !!* *இன்ஜெக்ஷனின் அசல் விலை 500/=, ஆனால் மருத்துவர் தனது மருத்துவமனையில் MRP தருகிறார் அதாவது 1,800/=...* என்ன செய்வீர்கள்??

***............தொற்று ஏற்பட்டு விட்டது..!***

மருத்துவர் எழுதிய ஆன்டிபயாடிக், அது ரூ.540/= விலை.., அதே மருந்து மற்றொரு நிறுவனத்தில் 150/= மற்றும் ஜெனரிக் ரூ45 /=.. ஆனால் வேதியியலாளர் மறுக்கிறார்.., நாங்கள் ஜெனரிக் அல்லது மற்ற நிறுவனங்களைத் சார்ந்தவற்றைத் தர மாட்டோம்.., என்பார்; மருத்துவர் எழுதிக் கொடுத்ததை மட்டும் கொடுப்பார்கள்... *அதாவது 540/=?* நீங்கள் என்ன செய்வீர்கள் ??

- சந்தையில் *அல்ட்ராசவுண்ட் பரிசோதனை 750/= ரூபாயில் உள்ளது., அறக்கட்டளை மருந்தகம் 240/= ரூபாயில் செய்கிறது! 750/= மருத்துவர் கமிஷன் 300/= ரூபாய்!* எம்ஆர்ஐயில் *டாக்டர் கமிஷன் ரூ. 2,000/= முதல் 3,000/= வரை!*

* டாக்டர்கள் மற்றும் மருத்துவமனைகளின் இந்த கொள்ளை, இந்த களியாட்டம், அச்சமின்றி, இந்நாட்டில் நடக்கிறது!

மருந்துக் கம்பெனிகளின் லாபி, நாட்டையே நேரடியாகப் பயணக் கைதியாக வைத்திருக்கும் அளவுக்கு வலிமையானது!

*மருத்துவர்களும் மருந்து நிறுவனங்களும் கூட்டு!* *இருவருமே அரசாங்கத்தை பிளாக்மெயில் செய்கிறார்கள்...!!*
மிகப்பெரிய கேள்வி.!!. ஊடகம் என்ன சொல்கின்றன?. *ஊடகங்கள் இரவும் பகலும் என்ன காட்டுகின்றன?*

- குழியில் விழுந்த இளவரசன்..,
- டிரைவர் இல்லாத கார்,
- ராக்கி சாவந்த், பிக்பாஸ்,

- மாமியார் மருமகள் சூழ்ச்சி,
- க்ரைம் ரிப்போர்ட்,
- கிரிக்கெட் வீரரின் கேர்ள் பிரெண்ட்,

இதையெல்லாம் காட்டுகிறார்கள்; ஆனால்... டாக்டர், மருத்துவமனை மற்றும் மருந்து நிறுவனங்களின் வெளிப்படையான கொள்ளையை ஏன் காட்டவில்லை?*

**ஊடகங்கள் காட்டவில்லை என்றால், யார் காட்டுவார்கள்?**

இன்றைய காலத்தில் மருத்துவ உலகம் எதை நோக்கி பயணிக்கிறது சிறிய பெரிய மருத்துவமனைகள் ஏன் அதிகமாக கட்டணம் வசூலிக்கிறார்கள் ?//

**பணம் பிடுங்கும் தொழில். வசூல் ராஜா எம் பி பி எஸ்.**

**எது சரியான கட்டணம். எந்தெந்த வசதின்னு வரையறுக்கபடவில்லையே! கேள்வியே கேட்கவில்லையே!**

**கிளினிக்குல வாங்கறான். அது அநியாயம் தான். மறுக்கலை! அதுல பார்மசியில கமிசன் வருது. எக்ஸ்ரே லேப்ல கமிசன் வருது. பிளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட் சென்டர்ல என எல்லாத்துலேயும் லாபம் வருது. அப்பவும் பீஸ் 300ரூ விலேயிருந்து 500ரூ வரைக்கும் வாங்கறான். எல் ஐ சி அன்டர் ரைட்டிங் என்று சொல்வாங்க பாலிசி எடுப்பதற்கு உடல் பரிசோதனை செய்யனும். அதை செய்யாமலே சர்ட்டிபிகேட் கொடுப்பான். அதுல எக்கச்சக்க வருவாய் வருது. இப்படி நிறைய வருவாய் வருது. என்ன பன்றது?**

**மருத்துவப் படிப்பை வெளிநாட்டுக்காரன் நல்லதுக்காக கண்டுபிடித்தான். மக்கள் பிணி தீருவதற்கு கண்டுபிடித்தான். நாம அதை மக்கள் கிட்டேயிருந்து கொள்ளையடிப்பதற்கு பயன்படுத்துகிறோம். இதானே நம்ம நாட்டுக் கொள்கை! அரசியல்வாதிகளின் கொள்கை! மலிவா எவன் மருத்துவம் பார்ப்பான்?**

**இந்த படிப்பை பணம் சம்பாதிக்கும் எண்ணம் இல்லாதவன் தான் படிக்கனும். அவன் ஏழையாத்தான் இருக்கனும். அப்படி எங்கே இருக்காங்க?**

**லட்சம் கோடின்னு பணம் செலவுப் பண்ணி படிச்சிட்டு பணம் வாங்காம எவன் மருத்துவம் பார்ப்பான்? உடனே ஏழை படிச்சிட்டா ஏழைக்கு மருத்துவம் பார்ப்பான்னு எல்லாம் நினைக்காதீங்க. அவனும் துட்டு சம்பாதிக்க கொள்ளையடிக்கத்தான் படிக்க அலையறான்! இவங்களை விட அதிகமாகவே கொள்ளையடிப்பான்.**

- மருத்துவ லாபியின் கொடுமை எப்படி நிறுத்தப்படும்?
- **இந்த லாபி.... அரசாங்கத்தை கையாலாகாத நிலையில் வைத்திருக்கிறதா?**
- **ஊடகங்கள் மௌனமாக இருப்பது ஏன்? * டாக்டர் என்ன செய்வார்???**
- **மக்களின் உயிரை வதைத்து பணம் சம்பாத்திக்கும் மருத்துவத் தொழில் தேவையில்லை.**
- **கறுப்பு பணம் சம்பாதிக்கும் வழிகள் முடிவுக்கு வர வேண்டும்,**

*இது உண்மை என்று நீங்கள் நினைத்தால்,! விழிப்புணர்வை கொண்டு வாருங்கள்; மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த உங்கள் ஆதரவை வழங்குங்கள்!!!* இலட்சிய சமூகத்தை உருவாக்குபவர்கள்

**தேவை: *சிந்தனை மாற்றம்*.**

# ராணுவ வீரர்களை அத்துக் கூலிகளாக்கவே அக்னிபாத்!

***-ச.அருணாசலம்** (aram online)*

June 18, 2022

தேசமே தீப்பிடித்து எரிகிறது! அக்னிபாத் என்பது இந்திய இளைஞர்களை இன்று அக்னி பிழம்பாக மாற்றியுள்ளது! பாஜக ஆட்சி இராணுவத்திற்கு கன்னாபின்னா என்று அதிக நிதியை ஒதுக்கி, ”ஆயுதங்களுக்கு அதிக நிதியை செலவழிப்போம். ஆனால், அர்ப்பணிப்போடு ராணுவத்திற்கு வரும் வீரகளை அத்துக் கூலிகளாக நடத்துவோம்” என்கிறார்கள்! பீகாரில் தொடங்கி உ.பி.ஹரியானா, ராஜஸ்தான், பஞ்சாப் , இமாச்சசல் பிரதேசம் ,தெலுங்கானா என அனைத்து வட இந்திய மாநிலங்களிலும் இளைஞர்கள் ரயில் மறியல் போராட்டங்களில் குதித்துள்ளனர். ஏராளமான ரயில்களின் சேவை நிறுத்தப்பட்டுள்ளது, வன்முறையும், போலீஸ் தடியடியும் தொடர்கிறது.

காரணம், புதிதாக மோடி அரசு அறிவித்த அக்னி பாதை (அக்னி பாத்) அக்னி வீரர்கள் (அக்னி வீர்) திட்டங்கள்தான் . இந்திய ராணுவத்திற்கு - இந்தியத் தரைப்படை கடற்படை விமானப்படை ஆகிய முப்படைகளுக்கும் ஆள் எடுக்கும் திட்டத்தில் பெரும் மாற்றங்கள் கொண்டுவந்து மோடி அரசு மேற்கூறிய புதிய நாமகரணங்களை சூட்டி ராணுவத்தில் சேர்வது என்ற இளைஞர்களின் கனவை தகர்த்துள்ளனர்.

வேலையில்லா திண்டாட்டம் நாட்டில் பயங்கரமாக வளர்ந்துள்ள இன்றைய நிலையில் ராணுவத்தில் சேர்வது என்பது கண்ணியத்தையும், கவுரவத்தையும் ஒருங்கே அளிக்கும் பாதையாகும். எண்ணற்ற ஏழை விவசாயிகள் நிறைந்த இந்நாட்டில் பள்ளிப்படிப்பை முடித்த ஏழை இளைஞர் பட்டாளத்திற்கு வாழ்க்கை உத்தரவாதத்தை வழங்குவதாகும். இராணுவத்தில் சேர கட் ஆப் மார்க்குகள், நீட் தடைகள் ஏதுமில்லை! தங்களது உடற்பயிற்சி, உடற் கட்டமைப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் ராணுவத்தில் சேருவதன் மூலம் ஒரு வருமானத்தையும், பெருமையையும் இதுவரை ராணுவப்பணி வழங்கி வந்துள்ளது.

அக்கினிப் பாதை என்பது 17.5 வயது முதல் 21 வயது நிரம்பிய இளைஞர்களை ஆண்டு தோறும் 30,000 முதல் 45,000 யான எண்ணிக்கையில் தேர்வு செய்யப்பட்டு ஆறு மாத பயிற்சிக்குப் பின்னர் அவர்களில் பெரும்பாலான 75% வீரர்களை நான்காவது ஆண்டு முடிவில் வீட்டுக்கு அனுப்பி விடுவார்களாம் . அவர்களுக்கு அதற்கு மேல் ராணுவத்தில் பணிபுரிய அனுமதி இல்லை. மேலும், பென்ஷன் ஓய்வூதியம் எதுவும் கிடையாது. நான்காண்டு பணி முடிவில் அவர்களுக்கு 11.7 லட்ச ரூபாய் வழங்கப்படுமாம்! இதை வைத்துக்கொண்டு அந்த அக்கினி வீரர்கள் தங்களது புதிய வாழ்க்கையை 22-25 வயதுகளில் தொடங்க வேண்டும் என்று மோடி அரசு விரும்புகிறது.

சுருங்கக்கூறின் அக்னி பாதை ராணுவத் திற்கு ஆள் எடுக்கும் முறையை காண்ட்ராக்ட் முறையாக மாற்றி உள்ளது. இதன் மூலம் பணி உத்திரவாதம் தடுக்கப்பட்டு 'ராணுவ வீரன்'என்ற பெருமையும் மதிப்பும் வீரர்களுக்கு மறுக்கப்படுகிறது. நாட்டுற்காகவும் சக மக்களுகளுக்காகவும் உயிரை பணயம் வைத்து போராடும் குணத்தை கேள்விக் குறியாக்குகிறது. இதனால் நான்காண்டுகள் தற்காலிகமாக அக்னி வீரர்களாக இருந்தவர்கள் வீட்டிற்கு அனுப்பபட்டவுடன் கயிறு அறுந்த பட்டமாக ஆக்கப்பட்டு விடுவர் . அதிருப்தியும் எதிர்காலம் பற்றிய அச்சமுமே அவர்களிடம் மிஞ்சும், பெருமையும் மிடுக்கும் மங்கி உரிய மண வாழ்வு கூட கிட்டாதவர்களாக மாற வாய்ப்புகள் அதிகமுள்ளன.

நம் கண்முன்னே முன்னாள் ராணுவ வீரர்கள் ஒரு கீழ்நிலை செக்யூரிட்டி வேலையிலோ அல்லது வாயிற் காவலர்களாகவோ அல்லது ஆட்டோ ஓட்டுநராகவோ அல்லது ஓட்டுனர்களாகவோ பணியாற்றி சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளதை காண்கிறோம். பல வருடங்கள் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் கதியே இவ்வாறென்றால் ஆறு மாத பயிற்சியில் நான்காண்டுகள் பணியாற்றி ராணுவ சம்பந்த்தை அறுத்து அனுப்பப்படுபவர்கள் கதி என்ன என்று சிந்தித்தன் விளைவுதான் இன்றைய இளைஞர்களின் அக்னி பாதைக்கெதிரான போராட்டம். இந்திய பாதுகாப்பு வரவு செலவு திட்டத்தில் ஓய்வூதிய தொகையின் பங்கு பெருமளவு உள்ளது! என்பது கவலை கொள்ளத்தக்க ஒரு விஷயம் என்றாலும் அதற்கு மாற்றாக அக்னி பாதை என்பது அரைவேக்காட்டுதனம் என பல்வேறு ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் வெளிப்படையாக கூறுகின்றனர்.

ஒரு நாடு ராணுவத்திற்கும், ராணுவத்திற்கும் செய்யப்படும் செலவு அந்நாட்டின் பாதுகாப்பையும் அவசியத்தையும் பொறுத்ததே ஒழிய நிதி பரிபாலனத்தை பொறுத்த விஷயமல்ல என்று முன்னாள் தலைமை தளபதி குறிப்பிட்டுள்ளார். ஒரே ரேங் ஒரே பென்ஷன் (One Rank One Pension) என்பதில் தொடங்கி ஓய்வு பெற்ற ராணுவத்தினரின் ஓய்வூதியம் வரை பல சிக்கல்கள் ஒன்றிய அரசிற்கும், பாதுகாப்பு அமைச்சகத்திற்கும் இருந்தாலும் இதை நிதி சம்பந்தப்பட்டதாக மட்டும் நினைக்காமல் மாண்பு சம்பந்தப்பட்ட விஷயமாக அணுக வேண்டும். எந்தவித கலந்தாலோசிப்பும் இன்றி எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முடிவு இந்திய ராணுவம் மற்றும் ராணுவத்தினரின் பெருமையையே குலைப்பதாக உள்ளது என்று எதிர்கட்சிகள் மோடி அரசை கண்டிக்கின்றன.

ஆண்டுதோறும் தேர்வு செய்யப்படும் அக்னி வீரர்களில் 25 சதவிகித்தினர் மட்டுமே நிரந்தர ராணுவ பணிக்கு தொடர்ந்து இருத்தப்படுவர் என்ற நிலையில் கழட்டிவிடப்பட்ட 75 சதவிகித வீர்களும் துணுக்குற்றவர்களாக, மனம் வெதும்பியவர்களாக மனநிறைவின்றி மீண்டும் இச்சமுதாயத்தில் நுழைவது என்பது பெருத்த அவமானமாகும். இதன் விளைவு ஏற்கனவே சாதி மத குழு போன்ற அடையாளங்கள் விரிந்து பரஸ்பர மதிப்பிளந்த ஒருங்கிணைப்பு இல்லாத இன்றைய இந்திய சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் பயங்கரமாயிருக்கும்.

ஆயுதங்கள் கையாளத்தெரிந்த அதே சமயம் விரக்தி அடைந்த இளைஞர் கூட்டம் பணம் படைத்தவர்களுக்கோ, சாதீய வெறியர்களுக்கோ மத வெறியர்களுக்கோ அல்லது மாறுபட்ட கௌரவங்களை தூக்கிப்பிடிக்கும் வல்லானுக்கோ ஏவல் செய்யும் கூலிப்படையாக மாறுவது சாத்தியம் மட்டுமல்ல நாளைய நிகழ்வாகவும் அமையும் .

ராணுவத்துறையின் செலவினத்தில் கிட்டதட்ட 54% ராணுவத்தினரின் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதிய நிவாரணங்களுக்குமாக நடப்பு நிதி ஆண்டில் செலவிடப்படுகிறது. 1,19,696கோடி ரூ. ஓய்வூதியங்களுக்காகவும்,1,63,453 கோடி ரூ. ஊதியங்களுக்காகவும் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய செலவினங்களை கட்டுப்படுத்தி தளவாடங்களின் உற்பத்திக்கும், கொள்முதலுக்கும் அதிகம் செலவழிக்க வேண்டும் என்ற நோக்கம் இந்த மாற்றங்களின் பின்னணியில் உள்ளன. ஆனால், ராணுவத் தளவாடங்களை இயக்கும் மனிதர்களின் வேலைக்கும், வாழ்வுக்கும் உத்திரவாதம் இல்லை என்றால் ,எப்படி அர்ப்பணிப்புள்ள ராணுவத்தை கட்டமைக்க முடியும்? பென்ஷன் சுமையிலிருந்து விடுபட காண்டராக்ட் முறையில் ராணுவத்திற்கு ஆட்கள் சேர்க்கும் அக்னிப்பாதை முறை ராணுவத்தினரின் பெருமையையும், மாண்பையும் குலைப்பதாக உள்ளது.

நாட்டில் உள்ள யதார்த்த நிலைகளையும், பிராந்திய வேறுபாடுகளையும் கணக்கில் கொண்டு சகோதரத்துவத்தையும் பெருமையும் கணக்கில் எடுத்து கடந்த 150 ஆண்டுகளுக்கு மேலாக மலபார் ரெஜிமென்ட், பீகார் ரெஜிமென்ட்,கூர்க்கா ரெஜிமென்ட், மெட்ராஸ் ரெஜிமென்ட் ராஜ்புட் ரெஜிமென்ட் என படைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு போற்றி வளர்க்கப்பட்டு வந்த நிலையை இந்த அக்னி பாத் முற்றிலுமாக நிராகரிக்கிறது. செழுமையாக ஒற்றுமையையும் உயர்ந்த நோக்கங்களையும் சகோதரத்துவத்தையும் வேற்றுமைகளுக்கிடையிலும் தூக்கிப்பிடிக்கும் இன்றைய பல்வேறு ரெஜிமென்ட் முறையை மாற்ற கூடாது அது தேவையற்ற சீர்குலைப்பு வேலை என்று ஓய்வு பெற்ற ராணுவத் தளபதிகள் கூறுகின்றனர்.

ஆயுத பயிற்சிக்காலம் ஆறு மாதங்களும் பின்னர் விடுமுறைகள், விடுப்புகள் போக பணிபுரியும் 30 மாத காலத்தில் அக்னி வீரர்கள் எத்தகைய பயிற்சியை பெற்று சிறப்பாக பணியாற்ற முடியும் என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. இன்றைய தொழில் நுட்பம் வளர்ந்த சூழலில் குறைந்தது ஐந்து வருடங்கள் முப்படைகளிலும் கையாளப்படும் தளவாடங்கள், சாதனங்களுடன் பயின்றால் தான் அதில் தெளிவும் மேலாதிக்கமும் கிடைக்கும் என்கின்றனர்

இது தவிர மாநிலங்கள் வாரியாக ராணுவத்திற்கு ஆள் எடுக்கும் முறையை இந்த புதிய திட்டம் நிராகரிக்கிறது. பல்வேறு பிரிவுகளையும் மொழி மற்றும் பழக்க வழக்கங்களையும் கொண்ட பரந்து விரிந்த இந்தியாவில் சமநிலையை கருத்தில் கொண்டு மக்கள் தொகைக்கேற்ப ஒதுக்கீடுகள் மூலம் பணியெடுப்பு 1966 முதல் நடைபெற்று வருகிறது. இதை இப்பொழுது காற்றில் பறக்க விடுவதன் மூலம் சமநிலை குலையும் அபாயமுள்ளது.

இந்த திட்டத்தின் ஆதிமூலம் வேறு யாருமல்ல, மறைந்த முன்னாள் முப்படை தலைமை தளபதி CDS பிபின் ராவத் அவர்கள் தான் . சீனத்திலும் இஸ்ரேல் நாட்டிலும் உள்ள இத்தகைய ஆள் எடுக்கும் முறையை இந்தியாவிலும் கொண்டு வருவது இந்தியாவிற்கு நல்லதல்ல! இந்தியா ஒரே மொழி ஒரே கலாச்சாரம் கொண்ட ஒரே தேசமல்ல, மாறாக பல்வேறு இன மக்களை பல்வேறு மொழி மற்றும் கலாச்சாரமுடைய மக்களை, பல்வேறு மாறுபட்ட நிலங்களை கொண்ட நாடு இத்தியா என்ற உண்மைகளை - மறந்துவிடுகிறார்கள்! ஆனால், பாஜக நினைப்பு இந்தியாவின் நினைப்பு அல்ல என்ற குரலின் வெளிப்பாடே இன்றைய இளைஞர்களின் போராட்டம். எந்த வகையில் நோக்கினாலும் நிதி சேமிப்பு, ஒற்றுமை, ஒருங்கிணைப்பு உயர்ந்த தரம் என எந்த வகையிலும் உதவாத இந்த அக்னி பாத் திட்டம் பிரச்சினைகளை மேலும் பெருக்குகிறதே ஒழிய குறைக்கவில்லை.

சமூக பொருளாதார வளரச்சி மேம்படவும் வேலையில்லாத திண்டாட்டம் குறையவும் ஆவன செய்யாமல் செருப்புக்கு தக்க காலை வெட்டும் பாதையாக அக்னி பாதை உள்ளது. எந்த கலந்தாலோசனையுமின்றி எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு தொடர்ந்து பல்வேறு தரப்பு மக்களையும் இத்திட்டத்திற்கெதிராக ஒன்றிணைய வைத்துள்ளது. 2013ம் ஆண்டு செப்டம்பர் 15ல் ஹரியானாவில் உள்ள ரேவாரி நகரில் நடந்த முன்னாள் ராணுவத்தினர் மாநாட்டில் கலந்து கொண்டு அன்றைய பாஜ கட்சியின் பிரதமர் வேட்பாளராக பேசிய மோடி, ஒரே ரேங் ஒரே பென்ஷன் OROP என்ற கொள்கையையும், கோரிக்கையையும் ஆதரித்து கவிதை மழை பொழிந்தார் .

இன்று ஒன்பது ஆண்டுகள் கழித்து அக்னி பாத் திட்டத்தின் மூலம் 'நோ ரேங், நோ பென்ஷன்' என்ற NRNP என அதல பாதாளத்திற்கு வசனமெழுதியுள்ளார்!

**நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்**

## நான் கோடீஸ்வரன் இல்லை

'மாடர்ன் ஆர்ட்டின் தந்தை' எனப் போற்றப்படுபவர், ஸ்பெயின் நாட்டு ஓவியரான பிக்காசோ. இவரது முழுப் பெயர், பாப்லோ ரூயிஸ் பிக்காசோ.

இவர் வரைந்த ஓவியம் ஒவ்வொன்றும் பல லட்சம் டாலர் விலை போகக் கூடியது. இவரது ஓர் ஓவியம் வீட்டிலிருந்தால், அந்த வீட்டுக்குக் கிடைக்கும் அந்தஸ்தை வெறும் வார்த்தைகளால் விவரித்துவிட முடியாது.

இத்தனை அரிய மனிதரான பிக்காசோ ஒரு சமயம் சில நெருங்கிய நண்பர்களுக்குத் தனது வீட்டில் ஒரு விருந்து கொடுத்தார். விருந்தில் கலந்து கொண்ட நண்பர்களில் ஒருவர் பிக்காசோவைப் பார்த்து, "இது உங்கள் வீடுதானா எனக்கு ஒரே சந்தேகமாக இருக்கிறது. உங்கள் ஓவியங்களை உலகமே பாராட்டிக்கொண்டு வாங்குகிறது: அப்படியிருக்க உங்கள் வீட்டுச் சுவர்களில் உங்களது ஓவியம் கூட இல்லையே !" என்றார்.

அதற்கு பிக்காசோ, "நீங்கள் சொல்வது உண்மை தான். என் வீட்டுச்சுவர்களில் என் ஓவியங்களை மாட்டி வைக்க எனக்கும் ஆசை தான். ஆனால் பல லட்சம் கொடுத்து எனது ஓவியங்களை வாங்க, நான் ஒன்றும் கோடீஸ்வரன் அல்லவே!" என்றார் அமைதியாக.

அவரது தன்னடக்கத்தை எண்ணி வியந்தார் அவரது நண்பர். பிக்காசோ நினைத்திருந்தால் ஏராளமான ஓவியங்களை அவரது வீட்டுச் சுவர்களில் மாட்டி வைத்திருக்கலாம். ஆனால் அப்படி செய்வதால் அவருக்கு என்ன பயன் ?

தனது திறமை மற்றும் செயல்கள், மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்று நினைக்கும் பொதுநலவாதிகள், தங்களுக்கென்று எதையும் தேடிக் கொள்ளமாட்டார்கள் என்பதே இச்சம்பவத்தின் கருத்து. அதனால் தான் பிக்காசோ அப்படி பதில் கூறினார்.

---

## செயற்குழுக் கூட்டம் (25-06-2022)

இன்று (25-06-2022) நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பொது செயலாளரும், நான்கு செயலாளர்களும் ஒரு பார்வையாளரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் 2022 மே மாத வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. ஜூலை 10ம் தேதி நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தின் முன்னேற்பாடுகள் பற்றி விவாதித்து, நடைமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

3. நெடுஞ்சாலைத்துறையில் கரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஒப்பந்தக்காரருக்கு வேலை ஏதும் செய்யாமல் பணம் வழங்கப்பட்ட முறைகேடு பற்றி விவாதிக்கப்பட்டது. நிர்வாகக் குழு விவாத முடிவில், ஆர்டிஐ(RTI) மூலம் முழு விவரங்கள் கேட்கப்பெற்று, சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மீது கிருமினல் வழக்குத் தொடரவும் தீர்மானம் செய்யப்பட்டது. பொதுச்செயலாளர் ஆர்டிஐ(RTI) மூலம் கேட்டறிந்து ,முறைகேடு ஏதேனும் கிடைக்கப்பெற்றால் மட்டுமே வழக்கு தொடர முடிபவெடுக்கப்பட்டது.
4. இறுதியில் பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந. சுப்ரமணியன்
தலைவர்

வே. கார்த்திகை ராஜன்
பொதுச்செயலாளர்

**ஊழல் எதிர்ப்பு இயக்க பொதுகுழு கூட்டம் நாள் 10-07-2022**
**ஞாயிற்று கிழமை காலை 9 மணி முதல் பிறபகல் 3.00 மணி வரை**
**இடம்: ஒட்டல் பாண்டியன், 15,கென்னத் லேன், எழும்பூர் ரயில் நிலையம் எதிரில்**
**நிகழ்ச்சி நிரல்**

**காலை 09-00 மணி முதல் 1030 மணி வரை அங்கத்தினர் பதிவு மற்றும் தேநீர்**

- **1030 மணி தமிழ் தாய் வாழ்த்து**
- **1035 வரவேற்புரை**
- **1045 தலைவர் உரை**
- **1100 இயக்க ஆண்டு அறிக்கை பொதுச் செயலர் சமர்ப்பித்தல்**
- **1120 இயக்க வரவு செலவு தணிக்கை செய்யப்பட்ட அறிக்கை நிதி செயலர்**
- **1200 ஊழல் எதிர்ப்பு வழிமுறைகள்/ செயல்முறைகள் பற்றி உரை**
- **1300 மதிய உணவு இடைவேளை**
- **1400 கூட்ட தீர்மானங்கள்**
- **14.15 ஊழல் ஒழிப்பு உறுதிமொழி**
- **14.25 நன்றி உரை**
- **15.00 நாட்டுப்பண்**

**மாவட்டம் மற்றும் கிளைச் செயலர்கள் இயக்க உறுப்பினர்கள் திரளாக வருகை தந்து கூட்டத்தை சிறப்பிக்க அன்போடு அழைக்கின்றோம்.**

**பொதுச்செயலர்**

---

**ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை.பதிவு எண்349/2001**
**மாநில பொறுப்பாளர் தேர்தல் 2022-23 முதல் 2024-2025 வரை**
**தேர்தல் இறுதி வேட்பாளர் பட்டியல்**

இயக்கத்தின் விதிமுறைகளின் படி அமைக்கப்பட்ட தேர்தல் குழு கீழ்க்கண்ட இறுதி வேட்பாளர் பட்டியலை வெளியிடுகிறது

| பொறுப்பாளர் பதவிகள் | வேட்பாளர் பெயர் | உறுப்பினர் எண் |
|---|---|---|
| 1. தலைவர் | ; N. சுப்ரமனியண் | LM 6 |
| 2 .துணைத்தலைவர் | : V. ஐயப்பன் | LM 456 |
| 3 பொதுச்செயலாளர் | : V. கார்த்திகை ராஜன் | LM 515 |
| 4 செயலாளர் (தலைமையகம்) | : J. மனோகர் | AM 1 /22-23 |
| 5. செயலாளர் (நிதி நிர்வாகம்) | : A. தனசேகரன் | LM 140 |
| 6. செயலாளர் (வெளியீடு) | : G. கோவிந்த சாமி | AM 9 /22-23 |
| 7. செயலாளர் (கலைத்தொடர்பு) | : N சாந்த குமார் | AM 8 /22-23 |
| 8. செயலாளர் (செயல்திட்டம்) | : வேட்பு மனு தாக்கல் இல்லை | |
| 9. செயலாளர் (மக்கள்தொடர்பு) | : ---------- | |
| 10. செயலாளர் (பயிற்சி) | : ----------- | |
| 11 செயலாள்ர் (சட்டநிர்வாகம்) | : ----------- | |

மேற்க்கண்ட ஏழு பொறுப்பளர்கள் பதவிகள் நிரப்பப்பட்டும், காலியாக நான்கு பதவிகள் உள்ளன.

**28-06-2022** **தேர்தல் குழுத் தலைவர்**

**ஊழல் எதிர்ப்பு இயக்கம் பதிவு எண் 349/200**
**31.03.2020 முடியும் நிதி ஆண்டிற்கான 20வது பொது குழுக்கூட்டம்**
**2020-2022 ம் ஆண்டு அறிக்கை**

இயக்க செயற்குழுவின் சார்பாக பொதுக்குழுவில் இயக்க பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கை பின்வருமாறு:-

1. **இயக்க கட்டமைப்பு நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள்**: 21 ஆண்டுகள் முடிந்து 22ம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளோம். தற்போது 6 மாவட்டக் கிளைகளும்,6 கிளைகளும் உள்ளன. ஆயுள் உறுப்பினர்கள் 576 பேரும், ஆண்டு உறுப்பினர்கள் 13 பேரும் (01-04-2022 முதல்20-04-2022 வரை) 11 பேரும் (20-04-2022க்கு பிறகும்) ஆண்டு உறுப்பினர்களாக உள்ளனர்.. இயக்கத்திற்கு உரிய நிர்வாகத்துடன் இயக்கம் தமது லட்சியத்தை நோக்கி தொடர்ந்து நடைபோட்டு க்கொண்டு வருகிறது. முன்னேறும் வேகத்தில் தொய்வு இருப்பினும், கொள்கையில் பிடிப்புடன் செயல்பட்டு வருகிறோம் நமது லட்சியத்தை விரைவில் அடைவதில் தொடர்ந்து செயல்படுவோம். இயக்கக் கொள்கைபடியும் சுயநலம் இன்றியும் செயல்பட ஆர்வமுள்ள இளைஞர்களும் பணிஓய்வு பெற்ற ஆர்வலர்களும் நிர்வாகிகளாக வரவேண்டும். வந்து முழுமூச்சுடன் உழைத்தால் கண்டிப்பாக நாம் நமது இலக்கை அடைவது சுலபம். அதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும் இயக்கத்தலைமையகம் சென்னையில் ஒரு ஊழியருடன் (மாத சம்பளம் ரூ.5000/-)01.01.2007 முதல் இன்று வரை எண். 155, கொன்னூர் நெடுஞ்சாலையில், மறைந்த இயக்க துணைத் தலைவர் திரு.வி.ஆர்.சந்திரன் அவர்கள் கட்டிடத்தில் (வாடகை மாதம் ரூபாய் 7000/- த்துடன் இயங்கி வருகிறது, அவருக்கு மனமார்ந்த நன்றியினை இயக்கம் சார்பாக இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. **இயக்க நிதிநிலை**: எந்த இயக்கமும் நிதிநிலை சீராக இல்லையேல் செயல்பட இயலாது. இயக்க ஆயுள் உறுப்பினர் வைப்பு நிதிநிதியிலிருந்து நமக்கு வந்த வட்டியில் இருந்து எடுத்து செலவிடப்பட்டுள்ளது. வைப்பு நிதி அனைத்தும் கூடுதலாக வட்டி தரும் தமிழ்நாடு பவர் பைனாஸ் கார்பரேஷனில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. வரவு=செலவு கணக்கை ஆண்டு தோறும் எக்கட்டணமும் பெறாமல் தணிக்கை செய்துதரும் திரு,சி.என்.ஜெயசந்திரன் ஆடிட்டர் அவர்களுக்கும் மற்றும் பங்குதாரர் திருமதி. ஆர். மகேஷ்வரி அவர்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இயக்கத்திற்கு மாவட்ட கிளைகள் மற்றும் கிளைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைவின்றி இருக்கவும், இந்த கிளைகளின் நிர்வாகிகளின் தேர்தலை உடன் நடத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையால், திருச்சி, மாவட்ட தேர்தல் மட்டும் நடத்தி முடிக்கபட்டுள்ளது. மேலும் தூத்துக்குடி, தஞ்சாவூர், கோவை மாவட்டங்கள் கடலூர் மாவட்டம் புவனகிரி, விருதசாலம், ஸ்ரீ முஷ்ணம், திருச்சி மாவட்டம், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர், திருவெறும்பூர் கிளைகளிலும் தேர்தல் நடத்தப்படவேண்டும். இயக்கத்தின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் கிளைகளும் பணப்பதிவேடு முறையாக பின்பற்ற வேண்டும்.

3. **ஊழல் ஒழிப்பு வழக்குகள்:-** நெடுஞ்சாலைத்துறையில் டெண்டர் விடுவதில் நடந்திருக்கும் முறைகேடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர சேலம் உட்பட 8 மாவட்ட நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர்களிடம் இருந்து ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குரிய டெண்டர்களையும் அது சம்பந்தமான கோப்புகளையும் RTI சட்டம் 2005-கீழ் கோரியிருந்தோம். இதில் ஒரு சில மாவட்டங்கள் தர மறுத்துவிட்டது. ஒரு சில மாவட்டங்கள் கோரிய விவரங்களை சரியாக அளிக்கவில்லை. இவைகள் குறித்து முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தகவல் அறியும் சட்ட ஆணையரியடம் முறையிடபட்டுள்ளது. தமிழ்நாட்டில் விதிமுறைகளை மீறி இலஞ்ச ஊழலின் விளைவாகக்

கட்டடப்பட்ட கட்டிடங்களை ஒரு தொகையை பெற்றுக்கொண்டு வரைமுறைப்படுத்த அரசு பிறப்பித்த விதிகள் திருத்தத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அது நிலுவையில் உள்ளது என்பதனை தெரிவித்துகொள்கிரோம்.. இதே போன்று அமைச்சர் செந்தில் பாலாஜி மீதும் ஊழல் வழக்குகள் (முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த போது நடந்த ஊழல்) பொது நல வழக்கு போடப்பட்டுள்ளது.

4. **சட்ட வழக்குகள் நிதி:** ஊழல் சம்பந்தமாக நமது இயக்கம் பொதுநலவழக்கு தொடர இருக்கிறோம். தற்போது அமைச்சர் செந்தில் பாலாஜி மீது வழக்கு தொடரப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இது போன்ற செயல்களுக்கு அதிகமாக பணம் தேவைப்படுகிறது. அதற்காக சட்ட வழக்கு நிதிக்கு தனியாக நன்கொடை வசூலிக்க முடிவெடுக்கப்பட்டு .நடைமுறையில் உள்ளது. இயக்க உறுப்பினர்கள் தாராளமாக நிதியுதவி வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உள்ளது. மேலும், கரூர் மாவட்டத்தில், வேலைகள் செய்யாமலேயே அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி அவர்கள் பினாமி காண்ட்ராக்டருக்கு பல கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இது குறித்தும் இயக்கம் குற்ற வழக்கு பதிய நடவடிக்கை எடுக்கவுள்ளது. மோடி அரசால் ஊழலை ஆலமரம் போல் நிலைத்து நிற்கக் கொண்டுவரப்பட்ட 2018ம் ஆண்டின் ஊழல் எதிர்ப்பு சட்ட திருத்தம் மீது வழக்கு தொடுக்கவுள்ளோம்.

5. **நேர்மை நெறி:** நம் இயக்கத்தின் ஜெயபேரிகையாக இருக்கும் நேர்மை நெறி மாதாந்திர இதழ் வெளியிடுவது குறித்து டெல்லி ஆர்.ன்.ஐ. அலுவலகத்திடம் இருந்து தற்போது உள்ள நிர்வாகிகளின் பெயர் மாற்றம் செய்து அறிக்கை பெறப்பட்டு உரிய தபால் அனுமதியுடன் செயல் பட உள்ளோம்.

6. **வேண்டுகோள்:**-:நாம் திறமைசாலியாக இல்லாமல் இருக்கலாம்.நமது லட்சியத்தை அடைய பல வருடங்கள் ஆகலாம்.. ஆனால் என்றுமே நமது உறுப்பினர்களின் நேர்மையும் ஒழுக்கமும் கேள்விக்குறியாகக் கூடாது என்பதில் நாம் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும் என்று பொதுக்குழு உறுப்பினர்களை இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறோம்.

**வாழக ஊழல் எதிர்ப்பு இயக்கம்**

**பொதுச்செயலர்**
**மாநில செயற்குழு**



தினமலர்
உண்மையின் உரைகல்

24.6.2022



# 37 ஆயிரம் அரசு ஊழியர்கள் முறைகேடாக நகை கடன் தள்ளுபடி

## தணிக்கையில் கண்டுபிடித்தது தமிழக அரசு

கோவை, ஜூன் 24–
தமிழக அரசின் உத்தரவை மீறி, 37 ஆயிரத்து 984 அரசு ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு, கூட்டுறவு வங்கிகளில் முறைகேடாக நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டது தணிக்கையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலில் அளித்த வாக்குறுதிப்படி, தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும், கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களில், 5 சவரனுக்கு உட்பட்டு பெறப்பட்டிருந்த நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

அரசு ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர், கூட்டுறவு வங்கிகளில் பணிபுரிவோர் மற்றும் குடும்பத்தினர், ஓய்வூதியர்களுக்கு இச்சலுகை கிடையாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அரசு ஊழியர்கள், குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதை மறைத்து, நகைக்கடன் தள்ளுபடியை பலர் பெற்றிருக்கின்றனர். கடன்தாரர்களின் ஆதார் மற்றும் ரேஷன் கார்டு எண் உள்ளிட்டவற்றை பெற்று, தணிக்கைக்கு உட்படுத்தினர். அப்போது, 37 ஆயிரத்து, 984 அரசு ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர், நகைக்கடன் தள்ளுபடி பெற்றது தெரிய வந்தது. இவர்கள், எந்த அரசு அலுவலகத்தில், என்ன பொறுப்பில் பணிபுரிகிறார்கள் என பட்டியல் தயாரிக்கப்பட்டது.

ஊழியர் பெயர், அரசு ஊழியருக்கான எண், வகிக்கும் பதவி, தற்போது பணிபுரியும் துறை, கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன் எண், கடன் அசல் தொகை, வட்டி என, பெயர்களுடன் அறிக்கை தயாரானது.

இவர்களுக்கு, அரசு உத்தரவுக்கு மாறாக, முறைகேடாக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால், தள்ளுபடி செய்ததை ரத்து செய்து, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக, அனைத்து மண்டல கூட்டுற இணை பதிவாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சண்முகசுந்தரம் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

கடன் பெற்றிருந்தவர்கள் பட்டியலை ஆய்வு செய்தபோது, தாசில்தார், துணை தாசில்தார், பி.டி.ஓ., பேரூராட்சி செயல் அலுவலர்கள், ஆசிரியர்கள், கல்வி பிரிவு ஊழியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள் பலரும், போலீசாரும் தள்ளுபடி பெற்றிருப்பது தெரிய வந்திருக்கிறது.

கூட்டுறவு சங்க இணை பதிவாளர்களில் ஒருவர் கூறுகையில், 'கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களில், அரசு ஊழியர்கள், குடும்பத்தினர் நகை கடன் தள்ளுபடி சான்றிதழ் பெற்றிருக்கும் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

'அதன்படி, ரத்துசெய்யப்படும். இனி, அசல் மற்றும் வட்டியுடன் கடன் தொகை அவர்களிடம் வசூலிக்கப்படும். நகையை திரும்ப பெற்றிருந்தாலும், அரசு ஊழியர்கள் என்பதால் கடன் தொகையை வசூலிக்க முடியும்' என்றார்.



# அத்துமீறும் போலீசாருக்கு டி.ஜி.பி., எச்சரிக்கை

சென்னை, ஜூன் 7–
'பொது மக்களிடம் போலீசார் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும்; மீறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என, டி.ஜி.பி., சைலேந்திரபாபு எச்சரித்துள்ளார்.

சமீபத்தில், சென்னையில், நள்ளிரவில் போலீசாரின் வாகன சோதனையில், விக்னேஷ், 25, என்பவர் சிக்கினார். போலீஸ் காவலில் இறந்தார். போலீசார் அடித்து கொன்று விட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இச்சம்பவத்திற்கு பின், 'குற்றங்களில் ஈடுபட்டவர்களை, காவல் நிலையங்களில் மாலை, 6:00 மணிக்குள் விசாரிக்க வேண்டும். போலீஸ் விசாரணை மரணங்கள் தவிர்க்கப்பட வேண்டும்' என, டி.ஜி.பி., எச்சரிக்கை விடுத்தார்.

இந் நி லையில், கோவையில், 'ஸ்விக்கி' உணவு வினியோக நிறுவன ஊழியர் மோகனசுந்தரம், 38, என்பவரை, போக்குவரத்து போலீஸ்காரர் சதீஷ், 45, கொடூரமாக தாக்கும் 'வீடியோ' சமூக வலைதளத்தில் பரவியது. இதையடுத்து, சதீஷ் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதுடன், கைதும் செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து, டி.ஜி.பி., சைலேந்திரபாபு பிறப்பித்துள்ள உத்தரவு:

பொது மக்களிடம், போலீசார் க ண் ணி ய மா க நடந்து கொள்ள வேண்டும் என, பல முறை வலியுறுத்தப்பட்டு உள்ளது.

ஒ வ் வொ ரு போலீஸ்காரரும் சட்டத்திற்கு உட்பட்டு பணியாற்ற வேண்டும். எவரையும் அடிக்கவோ, துன்புறுத்தவோ கூடாது. கோவை சம்பவம் கடைசியாக இருக்கட்டும். இனி சட்டத்தை மீறி செயல்படும் போலீசார் மீது, ஒழுங்கு நடவடிக்கை பாயும்.

இவ்வாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

சைலேந்திரபாபு



<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**



THE HINDU
THURSDAY, JUNE 23, 2022

## Wadhawans, DHFL booked in ₹34,615-crore fraud case

Firm, promoters allegedly cheated a consortium of 17 banks

SPECIAL CORRESPONDENT
NEW DELHI

The Central Bureau of Investigation (CBI) has booked Dewan Housing Finance Corporation Ltd. (DHFL), its promoters and others for allegedly cheating a consortium of 17 banks of ₹34,615 crore. This is the biggest-ever bank fraud case registered by the agency.

Among those arraigned are the DHFL's then chairman-cum-managing director Kapil Wadhawan, promoter director Dheeraj Wadhawan, Sudhakar Shetty of the Sahana Group, Amaryllis Realtors, Gulmarg Realtors, Skylark Buildcon, Darshan Developers, Sigtia Constructions, Creatoz Builders, Township Developers, Shishir Realty and Sunblink Real Estate.

On Wednesday, the CBI conducted searches on the premises of the accused persons at 12 places in different parts of Mumbai.

Incorporated in April 1984, the DHFL extended financial assistance to low- and middle-income group individuals for buying houses and also engaged in other financial intermediation.

The case has been registered on a complaint from the Union Bank of India, which led the consortium. According to the first information report (FIR), a group of 29 lenders, formed in July 2010, initially extended credit facilities to the company. In July 2020, there were 17 consortium members and the quantum of credit facilities was ₹42,871.42 crore.

The loans were sanctioned by lenders in Delhi, Mumbai, Ahmedabad, Kolkata, Kochi, Pune, Chennai, Hyderabad, Mangalore and Bengaluru.

This aside, the banks had subscribed to the DHFL's non-convertible debentures in 2016-18. The company defaulted on its debt payment obligations from May 2019 onwards.

Well before that, several non-banking finance companies were facing problems in fund-raising after the IL&FS Group entities defaulted on its commitments. It was followed by a sharp correction in the DHFL share price.

DHFL-linked entities are already under the scanner of multiple probe agencies for alleged financial irregularities, including the Yes Bank loans.

In March 2021, the CBI had booked the company and its promoters for allegedly claiming interest subsidy under the Pradhan Mantri Awas Yojana.

The CBI conducted searches on premises of accused at 12 places in Mumbai. • REUTERS



## மகனின் உடலை தர லஞ்சம் பிச்சை எடுத்த பெற்றோர்

பாட்னா, ஜூன் 10–

பீஹாரில், மருத்துவமனை ஊழியர்களுக்கு லஞ்சம் தர, பிச்சை எடுத்த பெற்றோரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பீஹாரில், முதல்வர் நிதிஷ்குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம் – பா.ஜ., கூட்டணி ஆட்சி நடக்கிறது. இங்கு, சமஸ்டிபூர் கிராமத்தில் வசிப்பவர் மகேஷ் தாக்குர். இவரது மகன் சில நாட்களுக்கு முன் காணாமல் போனார்.

இது குறித்த புகாரின் படி போலீசார் விசாரித்து வந்த நிலையில், மகேஷின் மகன் இறந்து விட்டதும்; சதார் அரசு மருத்துவமனையில் உடல் இருப்பதும் தெரிய வந்தது.

மகன் உடலை வாங்கி வர, மகேஷ் மற்றும் அவரது மனைவி, சதார் சென்றனர். ஆனால், 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் மகன் உடலை தர முடியும் என, மருத்துவமனை ஊழியர்கள் கூறியதாக தெரிகிறது.

இதையடுத்து, மகேஷும், அவரது மனைவியும் வீடு, கடைகளுக்கு சென்று, மருத்துவமனை ஊழியர்களுக்கு லஞ்சம் தர வேண்டும் என கூறி பிச்சை எடுத்தனர்.

இதைப் பார்த்த ஒரு சமூக ஆர்வலர், இருவரும் பிச்சை எடுப்பதை, 'வீடியோ' எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டார்.

அந்த வீடியோ வேகமாக பரவி, பீஹார் மட்டுமின்றி நாடு முழுதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த வீடியோவை பார்த்து உயர் அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து விசாரணை நடத்திய சதார் மாவட்ட கலெக்டர் வினய்குமார் ராய் கூறியதாவது:

சதார் அரசு மருத்துவமனையில் எந்த ஊழியரும் மகேஷ் தாக்குரிடம் லஞ்சம் கேட்கவில்லை. விதிமுறைப்படி, 72 மணி நேரம் வரைக்கும் இறந்தவர் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாது.

'நீங்கள் 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் கூட, உங்கள் மகன் உடலை இப்போது ஒப்படைக்க முடியாது' என்று தான் மருத்துவமனை ஊழியர்கள் கூறியுள்ளனர். அதை மகேஷ் தாக்குர் தவறாக புரிந்து கொண்டு உள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

இறந்த மகன் உடலை வாங்க மருத்துவமனை ஊழியர்களுக்கு லஞ்சம் தருவதற்காக, பீஹாரின் சதார் நகரில் வீடு வீடாக சென்று பிச்சை எடுத்த மகேஷ் தாக்குர் மற்றும் அவரது மனைவி.

இயற்கை நூலிழைகளால் தயாரிக்கப்பட்ட ஆடைகளையே பயன்படுத்தவும்


**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

**C.N. JAYACHANDRAN & CO, F.C.A.**
**CHARTERED ACCOUNTANTS**
PARTNERS: C.N.Jayachandran B.Com.,F.C.A.,
R.Maheshwari B.Com.,F.C.A.,

Room No.2 Third Floor
Catholic Centre,
64/108, Armenian Street
Chennai - 600 001
Phone :044-25387204

01.06.2022

AUDITOR'S REPORT TO THE MEMBERS OF THE ASSOCIATION ANTI CORRUPTION MOVEMENT – (REDG. UNDER THE SOCIETIES ACT) REG NO: 349/2001, NO.7, KAVERI STREET, GANDHI NAGAR, SALIGRAMAM,CHENNAI–600093,ADMN.OFF.NO.155,KONNUHIGHROAD,AYANAVARAM, CHENNAI- 600 023 FOR THE YEAR ENDED 31ST MARCH 2022.

We have audited the Balance Sheet of the Association ANTI CORRUPTION MOVEMENT as on 31st March 2022 and the Income and Expenditure Account for the year ended on that date and report that:

We have obtained all the information and explanations which to the best of our knowledge and belief were necessary for the purpose of our audit.

In our opinion proper books of accounts as necessary have been kept by the ANTI CORRUPTION MOVEMENT so far as appears from our examination of the books.

The Balance Sheet and Income and Expenditure Account are in agreement with the Books of accounts and,

In our opinion and to the best of our information and according to the explanations given to us, the said accounts give a true and fair view:

(a) In the case of Balance Sheet of the state of affairs of the ANTI CORRUPTION MOVEMENT as on 31.03.2022.

(b) In the case of Income and Expenditure Account of the Excess of Income over Expenditure for the year ended on that date.

(R MAHESWARI)
PARTNER
UDIN: 22210225AKJDPS4660

ANTI CORRUPTION MOVEMENT
REG.NO.349/2001
NO.7, KAVERI STREET, GANDHI NAGAR,SALIGRAMAM,CHENNAI-600 093.
ADMN.OFF:NO.155,KONNU HIGH ROAD,AYANAVARAM,CHENNAI- 600 023.

RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR 01.04.2021 TO 31.03.2022

| RECEIPTS | AMOUNT | PAYMENTS | AMOUNT |
|---|---|---|---|
| To Opening Balance: | | By Priniting & Stationery | 1,659 |
| Cash on Hand | 1,932 | " Postage/Xerox & Courier | 537 |
| Cash at Bank: | | | |
| SBI,A/c.No.10081976798 | 31,630 | | |
| IOB,A/c.No.41657 | 1,95,977 | " Salary to Office in Charge | 60,000 |
| " Subscription | 10,370 | " Travelling Expenses | 150 |
| " Life Membership | 9,700 | " EC Expenses | |
| " Donations | 50 | " Office Maintanance | 18,064 |
| " Nermai Neri - Donation | - | " General Body Expenses | - |
| " Bank Interest: | | " Payment to District Fund | - |
| S.B A/c.-SBI | 863 | " Rent paid | 70,000 |
| S.B.A/c. - IOB | 4,315 | " Rent Advance | |
| " FD Interest | 1,62,830 | " TDs on Interest received | 16,283 |
| " IT refund | | " Closing Balance: | |
| | | Cash on Hand | 497 |
| | | Cash at Bank: | |
| | | SBI,A/c.No.10081976798 | 32,493 |
| | | IOB,A/c.No.41657 | 2,17,984 |
| TOTAL RS. | 4,17,667 | TOTAL RS. | 4,17,667 |

We declare that the particulars furnished above are true and correct to the best of our knowledge and belief

Place: Chennai
Date :01.06.2022

(V.KARTHIKAIRAJAN)
General Secretary

(N.SUBRAMANIAN)
President

TO BE READ WITH MY REPORT

For C N JAYACHANDRAN & CO

(R MAHESWARI)
PARTNER
UDIN: 22210225AKJDPS4660

C N JAYACHANDRAN & CO. CHARTERED ACCOUNTANTS FRN: 001286S CATHOLIC CENTRE 64, ARMENIAN ST., CHENNAI-600 001

Secretary (Finance) ACM

ANTI CORRUPTION MOVEMENT
REG.NO.349/2001
NO.7, KAVERI STREET, GANDHI NAGAR,SALIGRAMAM,CHENNAI-600 093.
ADMN.OFF:NO.155,KONNUR HIGH ROAD,AYANAVARAM,CHENNAI- 600 023.

INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR 01.04.2021 TO 31.03.2022

| EXPENDITURE | | AMOUNT | INCOME | | AMOUNT |
|---|---|---|---|---|---|
| To Prinintg & Stationery | | 1,659 | By Subscription | | 10,370 |
| " Postage/Xerox & Courier | | 537 | " Donations | | 50 |
| " Salary to Office in Charge | | 60,000 | " Nermai Neri - Donation | | - |
| " Travelling Expenses | | 150 | " Interest on FD | | 1,62,830 |
| " Rent paid | | 70,000 | " Bank Interest: | | |
| | | | S.B A/c.-SBI | | 863 |
| " EC Expenses | | - | S.B.A/c. - IOB | | 4,315 |
| " Office Maintanance | | 18,064 | | | |
| " Payment to District Fund | | - | | | |
| " General Body Expenses | | - | | | |
| " Excess of Income over Expenditure | | 28,018 | | | |
| TOTAL | RS. | 1,78,428 | TOTAL | RS. | 1,78,428 |

We declare that the particulars furnished above are true and correct to the best of our knowledge and belief

Place: Chennai
Date :01.06.2022

(V.KARTHIKAIRAJAN)
General Secretary

(N.SUBRAMANIAN)
President

TO BE READ WITH MY REPORT

FOR C N JAYACHANDRAN & CO

(R MAHESWARI)
PARTNER
UDIN: 22210225AKJDPS4660

Secretary (Finance) ACM

ANTI CORRUPTION MOVEMENT
REG.NO.349/2001
NO.7, KAVERI STREET, GANDHI NAGAR,SALIGRAMAM,CHENNAI-600 093.
ADMN.OFF:NO.155,KONNU HIGH ROAD,AYANAVARAM,CHENNAI- 600 023.

BALANCE SHEET AS ON 31ST MARCH 2022

| LIABILITIES | | AMOUNT(RS) | ASSETS | | AMOUNT(RS) |
|---|---|---|---|---|---|
| GENERAL RESERVE: | | | FIXED DEPOSITS: | | |
| As per Last B/S. | -1,16,686 | | TNPF&IDC FD No.RAA36486 | 6,50,000 | |
| Add:Excess of Income | | | TNPF&IDC FD No.RAA36487 | 10,00,000 | |
| Over Expenditure | 28,018 | -88,668 | TNPF&IDC FD No.RAA363657 | 1,60,000 | |
| | | | TNPF&IDC FD No.RAA391268 | 1,00,000 | 19,10,000 |
| ADVANCE FROM MEMBERS | | | CASH & BANK BALANCES: | | |
| TOWARDS LIFE MEMBERSHIP: | | | Cash on Hand | | 497 |
| As per Last B/S | 9,36,855 | | | | |
| Add: Current year | 9,700 | 9,46,555 | Cash at Bank:-AYANAVARAM | | |
| | | | SBI A/C.No:10081976798 | | 32,493 |
| BUILDING FUND: | | | | | |
| As per Last B/S | | 1,84,213 | IOB A/C.No.41657 | | 2,17,984 |
| SPECIAL DONATION: | | | TDS on Bank FD | | 31,126 |
| Towards Corpus | | 12,00,000 | | | |
| | | | Rental Advance | | 50,000 |
| TOTAL RS | | 22,42,100 | TOTAL RS | | 22,42,100 |

We declare that the particulars furnished above are true and correct to the best of our knowledge and belief

Place: Chennai
Date : 01.06.2022

(V.KARTHIKAIRAJAN)
General Secretary

(N.SUBRAMANIAN)
President

TO BE READ WITH MY REPORT

FOR C N JAYACHANDRAN & CO

(R MAHESWARI)
PARTNER
UDIN: 22210225AKJDPS4660

C.N. JAYACHANDRAN & CO. CHARTERED ACCOUNTANTS FRN: 001286S CATHOLIC CENTRE 64, ARMENIAN ST., CHENNAI-600 001

Secretary (Finance) ACM

**<u>இயக்கத்தில் இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்-(ஆண்டு உறுப்பினர்கள் ஜூன் 2022)</u>**

| A.M | பெயர்/முகவரி/தொடர்பு எண் |
|---|---|
| 1 | J.Manohar<br>4/33,Anumantarayankoil Street , Otteri<br>Chennai-600012<br>8667674728 |
| 2 | S.Suriyanarayanan<br>5/361,Moogambigai nagar<br>Chikkayapuram<br>Kover-EB<br>Chennai-600122<br>9884942454 |
| 3 | A.Sivakumar<br>4/30,3rd main road<br>new colony, pallavaram<br>office oppsite,<br>chromepettai<br>9884284124 |
| 4 | T.Duraikannu<br>17,3rd street<br>Argeeswarar colony<br>chromepettai<br>Chennai-44<br>9840439951 |
| 5 | N.Sivakumar<br>3/40-4,pillayar koil st<br>puthupettai,pallipattu<br>Acharapakkam<br>Kanchipuram-603201<br>9952366322 |
| 6 | M.Dhameen anchari<br>249,Agasthiyan street<br>East Tambaram<br>Chennai-600059<br>9840894411 |
| 7 | R.sundhar<br>19,Kamarai nagar,8th st<br>Korattur<br>Chennai-600080<br>9941234887 |
| 8 | N.Shanthakumar<br>23/8,Kanakar street<br>Agaram<br>Chennai-600082<br>9884510791 |
| 9 | G.Govindhasamy<br>1/58c,Perumal koil street<br>Vadaperumbakkam<br>Chennai-600060<br>9841026766 |
| 10 | J.Godhandaraman<br>2/103,Chitthur road,<br>K.G.Kandikai<br>Thiruvallur-631205<br>9626438039 |
| 11 | B.Balaji<br>44,railway border road<br>kodambakkam<br>Chennai-600024<br>9283592385 |
| 12 | E.A.Britto raj kumar<br>A-25,Karthikeyan salai,<br>periyar nagar,<br>Chennai-600024<br>9445158334 |
| 13 | A.palani<br>289,1st street<br>Rajiv gandhi nagar<br>Urapakkam<br>Changalpattu-603210<br>99413332574 |
| 14 | T.Balasubramaniyan<br>199,Tamil street,<br>North Periyar nagr<br>Viruthachalam<br>Cuddalore-606001<br>9486766905 |
| 15 | Thiru.R.Govindasamy<br>Manmathan koil street,<br>Edachidurai<br>Mangalam pettai via,<br>Virudhachalam,<br>Cuddalore-<br>9047194213 |
| 16 | Thiru.R.Rajenderan<br>2/4713,East street,<br>Valli maduram,<br>Dhittakudi tk,<br>Cuddalore-606109<br>9789686372 |
| 17 | Thiru.R.Blasubramaniyan<br>106,Mettu street,<br>Veppurtk,<br>Cuddalore<br>-9566870401 |
| 18 | Thiru.J.Shankar<br>67,Cudaloore road,<br>Virudhachalam,<br>Cuddalore-<br>9360010468 |
| 19 | Thiru.S.Selvamani<br>5,Palani murugan nagar,<br>Boothambur,<br>Virudhachalam,<br>Cuddlore<br>-9486874751 |
| 20 | Thiru.Agri.N.Venkatachalam<br>20/374,Bharathi street,<br>Sakthi nagar,<br>Viruthachalam tk,<br>Cuddalore-607001<br>8778483093 |
| 21 | Thiru.B.Kalivarathan<br>339,Periyar nagar(north)<br>Cuddalore road,<br>Viruthachalam,<br>Cuddalore-606001<br>9843357447 |
| 22 | M.Kanagaraj<br>109/1,East street<br>Naraiyur post<br>Nainarpalayam via<br>Veppur tk<br>Cudaloore-606301<br>9445238695 |
| 23 | B.Venkatakrishnan<br>13/6,Mettu street<br>Viruthachalam<br>Cudaloore-606001<br>9787389109 |

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- ஜூலை 2022**

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

*ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் முக்கியமான மருத்துவ எண்கள் இவை..*

1. இரத்த அழுத்தம்: 120/80
2. துடிப்பு: 70 - 100
3. வெப்பநிலை: 36.8 - 37
4. சுவாசம்: 12-16
5. ஹீமோகுளோபின்: ஆண்கள் (13.50-18) பெண்கள் ( 11.50 - 16 )
6. கொலஸ்ட்ரால்: 130 - 200
7. பொட்டாசியம்: 3.50 - 5
8. சோடியம்: 135 - 145
9. ட்ரைகிளிசரைடுகள்: 220
10. உடலில் உள்ள இரத்தத்தின் அளவு: 5-6 லிட்டர்
11. சர்க்கரை: குழந்தைகளுக்கு (70-130) பெரியவர்கள்: 70 - 115
12. இரும்பு: 8-15 மி.கி
13. வெள்ளை இரத்த அணுக்கள்: 4000 - 11000
14. பிளேட்லெட்டுகள்: 150,000 - 400,000
15. இரத்த சிவப்பணுக்கள்: 4.50 - 6 மில்லியன்..
16. கால்சியம்: 8.6 - 10.3 mg/dL
17. வைட்டமின் D3: 20 - 50 ng/ml (ஒரு மில்லிலிட்டருக்கு நானோகிராம்கள்.
18. வைட்டமின் B12: 200 - 900 pg/ml

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 July 2022
published online)

**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!